Case No. **O.S.No.5077/2019** **P.W.2: Reenu Ponniah** Date:05.07.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of the 5th July 2024.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1, 2 பிரதிவாதிகள் தரப்பில்): -**

வா.சா.ஆ 1, வா.சா.ஆ 2 ஆகியவற்றின் அடிப்படையில் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் 5 மற்றும் 6 வது பத்தியில் சொல்லியிருக்கும் விஷயங்கள் தவறானது மற்றும் உண்மையானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 3–ல் கண்டுள்ளபடி என் தயார் Medall என்ற Labouratory–ல் X–Ray Mammography என்ற பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் சரிதான். மேற்படி Medall Lab இவ்வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ 3– ல் கண்டுள்ள Disclaimer Point No.2 –ல் உள்ளபடி மேற்படி Report–ஐ தகுதி வாய்ந்த மருத்துவர் மூலமாக Interpretation–க்கு உட்படுத்தப்பட்டதா என்றால் அதனை 2 ஆம் பிரதிவாதியிடம் எடுத்து சென்று Interpretation–க்கு உட்படுத்தினோம். என் தாயாருக்கு Lump in breast அறிகுறி தெரிந்த பிறகுதான் மருத்துவரிடம் போனோமா என்றால் அவ்வாறுதான் போனோம். என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த Lump in breast குறித்து வேறு ஏதேனும் மருத்துவரிடம் 25.06.2015–க்கு பிறகு Second opinion பெற்றோமா என்றால்

இல்லை. நாங்கள் 25.06.2015 மற்றும் 08.08.2015 ஆகிய தேதிகளில் 2 ஆம் பிரதிவாதி மருத்துவரிடம் Consultation பெறுவதற்காக மட்டும்தான் போனோமா என்றால், அதற்காகதான் போனோம். 25.06.2015 மற்றும் 08.08.2015 ஆகிய தேதிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் என் தாயாருக்கு Lump in breast சம்மந்தமான அறிகுறிகள் ஏதேனும் இருந்ததாக தெரிய வந்ததா என்றால், தெரிய வந்தது. இந்த இடைப்பட்ட காலத்திலாவது வேறு மருத்துவரிடம் Second opinion பெற்றோமா என்றால் இல்லை. 2 ஆம் பிரதிவாதி கொடுத்த மருந்து, மாத்திரைகளின் அடிப்படையில் குணமாகிவிடும் என எண்ணி இருந்து விட்டோம். வா.சா.ஆ 6, வா.சா.ஆ 7 ஆகியவற்றின் அடிப்படையில் 2 வது பிரதிவாதி பரிந்துரைத்தன்படி நாங்கள் வேறு ஒரு மருத்துவரிடம் Second Opinion பெற்றோம் என்றால் சரிதான். அதன்படி மருத்துவர் செல்வி ராதா கிருஷ்ணா என்பவரிடம் Second Opinion பெற்றோம். 20.10.2015 அன்று டாக்டர் செல்வி ராதா கிருஷ்ணா என்பவர் சொன்னதன் அடிப்படையில் Appollo Speciality Hospital , Teynampet மற்றும் Bharath Scan at Royapet ஆகிய இடங்களில் Follow up Test மேற்கொண்டோம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் Appollo மருத்துவமனை தேனாம்பேட்டையில் பணியாற்றிய மருத்துவர் செல்வி ராதா கிருஷ்ணா என்பவரிடம் தொடர் சிகிச்சை மேற்கொண்டோம்

என்றால் சரிதான். மேற்படி மருத்துவர் செல்வி ராதா கிருஷ்ணா என்பவரை எனது தரப்பு சாட்சியமாக விசாரிக்க உள்ளோமா என்றால் அது குறித்து முடிவு செய்யவில்லை. வா.சா.ஆ 25 முதல் வா.சா.ஆ 33 வரையிலான ஆவணங்கள் குறித்து எனது பிராதில் கூறவில்லை என்றால் தவறு. எனது பிராதில் கூறியுள்ளேன். இவ்வழக்கில் 2 ஆம் பிரதிவாதி என் தாயாருக்கு வழங்கிய சிகிச்சை தவறானது என்பதை வலுபடுத்தும் வகையில், வேறு ஏதேனும் மருத்துவரிடம் கருத்துரை பெற்று ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆவணமாக கொடுக்கவில்லை. ஆனால் 1, 2 பிரதிவாதிகளால் சரியான சிகிச்சை வழங்கபடவில்லை என்று தெரிந்து கொண்டோம். மேற்படி மருத்துவமனைக்கு நான் பணம் செலுத்தினேன் என்பதை காட்டுவதற்கு ரசீதுகள் தவிர வேறு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. இந்த வழக்கை பொறுத்தவரைக்கும் எனக்கு தனிப்பட்ட முறையில் பாதிப்பு கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct

V PANDIARAJ

Digitally signed by V PANDIARAJ
Date: 2024.07.05 19:12:39 +0530

Dt:05.07.2024 IV Additional Judge.